## தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

நிறுவகத்திற்கு அரசாங்கத்திடமிருந்தும் வேறு வெளிநாட்டு நிறுவகங்களிடம் இருந்தும் பெறப்பட்டிருந்த மூலதன மானியங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரைவு நிதிக்கூற்றுக்கள் ஆய்வு செய்யப்படுகையில் பேரேட்டில் தவறாக மேற்கொள்ளப்பட்ட பிரதிபண்ணலினால் ரூபா 2,057,186 தொகையும், நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்த ரூபா 7,635,756 தொகையான பெறுவனவுகள் மற்றும் ரூபா 476,105 தொகையான கொடுப்பனவுகளுக்குமாக எம்மால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் பிரகாரம் அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் அத்தகைய

கணக்கீட்டுத் தவறுகள் காணப்படலாம் என்பது கணக்காய்வில் தவிர்க்கப்பட முடியாதிருந்தது.

(ஆ) காசேடு தயாரிப்பின் போதான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முறையே ரூபா 7,635,735 மற்றும் ரூபா 419,822 தொகைகளான நேரடி வைப்புக்களும் நிரந்தரக் கட்டளைகளும் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

(ii) காசேட்டின் கூட்டுத்தொகை தவறானதுடன் அதில் நிலவிய பதிவுகள் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட காசேட்டின் மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட காசுடு மீதிக்கும் இடையே ரூபா 913,859 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(iii) வரைவு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காசு மீதிக்கு ரூபா 281,652 தொகையான நாட்குறிப்புப் பதிவினைப் பயன்படுத்தி இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் காசேட்டிற்கு இம் மீதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 சனவரி 01 ஆம் திகதி நிலவிய ரூபா 602,030 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதி தீர்க்கப்படுவதற்காக நாட்குறிப்புப் பதிவின் மூலம் முறையே ரூபா 8,685,922 மற்றும் ரூபா 6,208,785 தொகையான வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 311,065 தொகையான செலவு மீதி ஒன்று காணப்பட்டது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நாட்குறிப்பு பதிவுகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட 14 கணக்கு விடயங்களின் திருத்தப்பட்ட மீதிகளுக்கும் இறுதி நிதிக்கூற்றுக்களின் மூலம்

சமர்ப்பிக்கப்பட்ட அம் மீதிகளுக்குமிடையே ரூபா 7,001,987 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் காணப்பட்டன.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்ட ரூபா 7,952,204 தொகையான 08 சொத்துக்களின் மீதிகளையும் ரூபா 1,193,778 தொகையான 02 பொறுப்புக்களின் மீதிகளையும் தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 48,314,155 கூட்டுமொத்தமான பின்வரும் 08 கணக்கு விடயங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| பதிவேட்டுப் பொருட்கள் | 237,805 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை. |
| ஏனைய கடன்கொடுத்தோர் | 1,885,342 | பட்டோலைகள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| செலுத்த வேண்டிய மீதி | 1,299,978 | - மேற்படி - |
| கடன்பட்டோர் | 14,517,332 | - மேற்படி - |
| ஊழியர் கடன் | 7.589,458 | - மேற்படி |
| உத்தியோகத்தர் சம்பளம் | 944,643 | நியமனக் கடிதங்கள் |
| நாட்குறிப்புப் பதிவுகள் | 18,676,433 | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் |
| காசேட்டின் செலவுப் பதிவுகள் | 3,163,164 | எழுத்து மூல உறுதிப்படுத்தல்கள் |
| | 48,314,155 | |

## 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | **நிதிப் பிரமாணம்** | |
| | நி.பி. 110 | நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயம் | |
| | 4.3.4 ஆம் உப பிரிவு | நிறுவனத்தின் 05 உத்தியோகத்தர் விடுதிகள் தொடர்பாக காத்திருப்போர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | 5.8 ஆம் உப பிரிவு | உத்தியோகத்தர் விடுதிகளில் குடியிருப்போரிடம் இருந்து நீர் மற்றும் மின்சாரக் கட்டணத்தை அறவிடும் நடைமுறை நிறுவகத்திடம் இருக்கவில்லை. 03 விடுதிகளின் மின்சாரக் கட்டணத்திற்காக முன்னைய 03 ஆண்டுகளுக்காக ரூபா 142,828 தொகையை நிறுவகம் செலவிட்டிருந்தது. |

**(இ) சுற்றறிக்கை**

**அரச நிருவாக சுற்றறிக்கை**

| | |
|---|---|
| (i) 41/90 ஆம் இலக்க 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | எரிபொருள் பயன்பாடு தொடர்பான ஆய்வு நிறுவகத்தின் வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2006 நவம்பர் 25 ஆம் திகதிய 20/2006 ஆம் இலக்க 04 மற்றும் 06 ஆம் பந்திகள் | புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக வழங்கப்படும் விசேட முற்பணம் வழங்கப்பட்ட ஆண்டிலேயே அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விசேட முற்பணக் கணக்கில் ரூபா 298,700 தொகையான மீதி காணப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 32.42 மில்லியன் தொகையான பற்றாக்குறையானதுடன் இதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 13.64 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 18.78 மில்லியன் தொகையான வீழ்ச்சிக்கு ஏனைய வருமான உழைப்பான ரூபா 10.3 மில்லியனாலான குறைவும் செயற்பாட்டுச் செலவினத்தின் ரூபா 19.21 மில்லியன் தொகையாலான அதிகரிப்பும் குறிப்பாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.2 செலவினங்களின் அதிகரிப்பு மற்றும் மூலதனக் குறைவுச் சந்தர்ப்பங்கள்

நிறுவகத்தின் ஆரம்ப மூலதனம் தொடர்பான குறித்த தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் வருடாந்த மூலதன மானியமாக

அரசாங்கத்தினால் பெறப்பட்டிருந்த பணத்துடன் திரண்ட நிதியாக ரூபா 240,649,046 தொகை 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்டிருந்த பற்றாக்குறை காரணத்தினால் முன்கொண்டுவரப்பட்டிருந்த திரண்ட பற்றாக்குறை ரூபா 140,789,491 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டு வரை பெறப்பட்டிருந்த ஒட்டுமொத்த மூலதன மானியம் திரண்ட நிதியத்தில் இருந்து அகற்றப்பட்டு கருத்திற் கொண்டிருப்பின் நிறுவகத்தின் ஆரம்ப மூலதனம் பாரிய குறைவிற்கு உட்பட்டு மறையான பெறுமதியைக் கொண்டிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் இம் மூலதனக் குறைவு தொடர்ந்தும் இடம்பெறுமாயின் நிறுவகத்தைத் தொடர்ந்து இயக்குவது தொடர்பில் சிக்கல்வாய்ந்த நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதிருக்கும்.

## 2.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

நிறுவகத்தின் கணக்காளர்களை உள்ளடக்கிய கணக்குப் பிரிவு காணப்பட்ட போதிலும் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக ஓய்வுபெற்ற கணக்காளர்கள் 2011 செப்தெம்பர் முதல் பணி ஒப்படைப்பு அடிப்படையில் சோக்கப்பட்டு 2011 திசெம்பர் முதல் பணிப்பாளர் (கட்டுப்பாடு) பதவிக்குரிய சகல செயற்பாடுகளும் ஒப்படைக்கப்பட்டு ரூபா 50,000 ஆன மாதாந்த படி செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முன்னைய 04 ஆண்டுகளின் வங்கி கணக்கிணக்கங்கள் தயாரிக்கப்படுவதற்காக 2011 ஒக்டோபர் மாதம் முதல் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 36,000 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

ரூபா 1,666,560 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட 16 பயிற்சி உபகரணங்களுக்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டி கோவையின் 5.4.10 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டுப் பாதுகாப்பைப் பெற்றிராததுடன் 8.9.1(ஆ) உப பந்தியின் பிரகாரம் முறையான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

திட்டமிடப்பட்ட மீண்டெழும் செலவினத்தையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தைப் போன்று மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிராமையால் திட்டமிடப்பட்ட இலக்குகளையும் செயலாற்றல்களையும் மதிப்பிட முடியாதிருந்தது. எவ்வாறெனினும், பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், பாடநெறிகளுக்காக மாணவர்களின் பங்களிப்பின் முன்னேற்றம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | பாடநெறி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பட்டம் | | டிப்ளோமா | | சான்றிதழ் | | மொத்தம் | |
| | 2010 | 2011 | 2010 | 2011 | 2010 | 2011 | 2010 | 2011 |
| வருட ஆரம்பத்திலான மாணவர்களின் எண்ணிக்கை | 24 | 80 | 96 | 105 | 306 | 192 | 426 | 377 |
| வருடத்தின் போது ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 50 | 49 | 157 | 102 | 443 | 506 | 650 | 657 |
| வருடத்தின் போது பயிற்சிகளைப் பூர்த்தி செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை | - | - | 128 | 89 | 344 | 374 | 472 | 463 |
| வருடத்தின் போது பாடநெறியை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை | 05 | 10 | 20 | 49 | 182 | 161 | 207 | 220 |
| வருட இறுதித் தினத்தில் உள்ளவாறான மாணவர்களின் எண்ணிக்கை | 75 | 119 | 105 | 69 | 223 | 163 | 403 | 351 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) ஆண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஒப்பாக அவ்வாண்டின் போது பாடநெறியை விட்டுச்

செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 33% ஆன அளவிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ii) கப்பல் நிர்மாணம் மற்றும் கடல் வாஸ்து சாஸ்திரம் தொடர்பான பட்டப் படிப்பு மற்றும் துறைமுக முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பாடநெறி திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டைப் போன்று முன்னைய ஆண்டின் போதும் திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுள்ள கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பதவியணி நிர்வாகம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் பதவியணி விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| பதவி | அங்கீகரிக்கப் பட்டவை | உள்ளபடியா னவை | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 13 | 12 | 01 | - |
| நிறைவேற்றுத் தரமற்ற | 225 | 128 | 97 | - |
| சிற்றூழியர் | 28 | 53 | - | 25 |
| மொத்தம் | 266 | 198 | 98 | 25 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளபடியான பதவியணியில் 24% ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் காணப்பட்டன. நிறுவகத்தின் நோக்கங்கள் எய்தப்படுவதற்காக நேரடிப் பங்களிப்பை வழங்கும் விரிவுரையாளர்களினதும் கடற்படைப் பிரிவின் வெற்றிட எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை முறையே 60% ஆகவும் 39% ஆகவும் காணப்பட்டது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த சம்பளம் ரூபா 25,640 ஆன கட்டுப்பாட்டுச் சபை மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக ஓர் உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு திறைசேரி அங்கீகாரம் இன்றி மாதாந்தப் படிப்பணம் ரூபா 35,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 23,400 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02, 03 மற்றும் 05 ஆம் பந்திகளின் பிரகாரம் அரசாங்க ஓய்வு பெற்ற மூன்று உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக ரூபா 388,085 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2010 திசெம்பர் 31 ஆம் திகதிய 26/2010 ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது 14 உத்தியோகத்தர்கள் ஒப்பந்தங்கள் மற்றும் பணி ஒப்படைப்பு அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு சம்பளங்களும் படிப்பணங்களுமாக ரூபா 2,042,077 செலுத்தப்பட்டிருந்தன.

(உ) 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தற்ற பதவிக்காக பணி ஒப்படைப்பு அடிப்படையில் 05 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,308,118 கூட்டுத்தொகை சம்பளங்கள் மற்றும் படிப்பணங்களாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.4 வாகனப் பயன்பாடு

வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிறுவகத்தின் 25 வாகனங்களைக் கொண்ட குழாம் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் வாகனப் பயன்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீள பழுதுபார்க்கப்பட முடியாத வகையில் உக்கிப் பழுதடைந்திருந்த பழைய 07 வாகனங்கள் கைதவிர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உலக உணவு மற்றும் விவசாய அமைப்பினால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த 05 வாகனங்களும் மீன்பிடி அமைச்சிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 01 வாகனமும் உரித்துள்ள நிறுவகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களி பொறுப்பும் நல்ஆளுகையும்

### 4.1 கூட்டுத்திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உப பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவு தொடர்பான மீளாய்வொன்று 2008 – 2011 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, எதிர்கொள்ளப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதி காண்பிக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான செயல்முன்னேற்றத்தினை நிதிரீதியாக மதிப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மேற்குறித்த சுற்றறிக்கையின் 5.1.3 உப பந்தியின் பிரகாரம் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டம் அடுத்துவரும் நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டுத்திட்டம்

மேற்குறித்த சுற்றறிக்கையின் 5.1.2 உப பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியின் போது எய்தப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும்

இலக்குகளுடன் முகாமைத்துவத்தின் பொறுப்புகள் தெளிவாக இனங்காணப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான ஓர் திட்டம் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

**4.3 கொள்வனவுத் திட்டம்**

அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.3(ஈ) பிரிவின் பிரகாரம் நடப்பாண்டின் போது கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்களும் சேவைகளும் தொடர்பாக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

கட்டிடங்களின் புனர்நிர்மாணம் மற்றும் மேம்பாடு தொடர்பான நிதி ஏற்பாட்டின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது வரிசை அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட பணத்தில் இருந்து மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக அப் பணத்திலிருந்து ரூபா 5,900,206 தொகை செலவிடப்பட்டு பணிப்பாளர் நாயகம் பயன்படுத்திய வீட்டை காரியாலயமாக்குவதற்கும் மட்டக்குளியில் உள்ள தலைமைக் காரியாலய வளவிலுள்ள தலைவரின் வீட்டைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம் முரண்கள் தொடர்பாக வரிசை அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வழங்கல்களும் சேவைகளும்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
(உ) வாகனப் பழுதுபார்த்தல்கள்
(ஊ) பதவியணியினர் ஆட்சேர்ப்பு